வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்ணா காசிம்

தேதி 04.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- புதுடெல்லியில் நடைபெறும் 23 ஆவது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடின் இன்று இந்தியா வருகிறார்.

- நாட்டில் சிறுத்தைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

- எந்த ஒரு பிரச்சனை குறித்தும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க தயாராக உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார்.

- குழந்தை திருமண முறையை ஒழிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

கடற்படை தினம் 1 (7)

கடற்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது. 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்திய கடற்படை 4 பாகிஸ்தான் கப்பல்களை மூழ்கடித்ததை நினைவு கூறும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி கடற்படை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை ஒட்டி, குடியரசு தலைவர், குடியரசு

துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் கடற்படை வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு............

(வாய்ஸ்)

*கடற்படை தினம் 2 (18) (வாய்ஸ்)*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி விடுத்துள்ள செய்தியில், கடல்சார் பாதுகாப்பிற்கும், நாட்டின் கடலோர மற்றும் கடல் சார் வணிக பாதுகாப்பிற்கும் இந்திய கடற்படையின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார். குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் கடல்சார் வலிமைக்கு எடுத்துக் காட்டாக கடற்படை விளங்குவதாக கூறியுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இந்திய கடற்படை வீரத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் அடையாளமாக திகழ்வதாக தெரிவித்தார். ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பலில் கடற்படை வீரர்களுடன் தீபாவளியை கொண்டாடியதையும் அவர் நினைவு கூர்ந்தார். இந்த ஆண்டு கடற்படை தினம் கொண்டாட்டங்களை கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி, ஆளுநர் திரு ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர், மத்திய இணையமைச்சர்கள் திரு சுரேஷ்கோபி, திரு சஞ்சய் சேத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இத்தினத்தை ஒட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஆகியோரும் கடற்படை வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*புடின் (14)*

புதுடெல்லியில் நடைபெறும் 23 ஆவது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடின் இன்று இந்தியா வருகிறார். நாளை பிரதமர் திரு நரேந்திர மோடியுடன்

இருதரப்பு பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொள்கிறார். பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய, சர்வதேச விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர். வர்த்தகம், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் மற்றும் ஊடக பிரிவுகளில் இரு நாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதனிடையே, பாதுகாப்ப அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்கும், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் திரு ஆன்ட்ரே பெலவ்சவும், 22 ஆவது இந்திய – ரஷ்ய ராணுவ நிலையிலான பேச்சுவார்த்தைகளையும் இன்று மேற்கொள்கின்றனர். பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளுக்கு இடையே உள்ள நட்புறவை ஆய்வு செய்வதோடு, ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்கின்றனர்.

*சிறுத்தைகள் தினம் (7)*

சர்வதேச சிறுத்தைகள் தினத்தை ஒட்டி அனைத்து வன உயிரியல் ஆர்வலர்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். சமூக வலைதளத்தில் இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவில் சிறுத்தை இனத்தை பாதுகாக்கும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். நாட்டில் சிறுத்தைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், குஜராத் மாநிலம் குனோ தேசிய பூங்காவில் சிறுத்தைகள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*நாடாளுமன்றம் (17)*

எந்த ஒரு பிரச்சனை குறித்தும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க தயாராக உள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் இன்று பேசிய அவர், எதிர்கட்சிகள் எழுப்பும் பிரச்சனைகள் குறித்து அரசு விவாதிக்க மறுப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை அவர் மறுத்தார். மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர்

திரு மல்லிகார்ஜுன கார்கே இது தொடர்பாக எழுப்பிய குற்றச்சாட்டுக்கு பதில் அளித்த அவர், மத்திய அரசு தொடர்ந்து எதிர்கட்சி எழுப்பும் பிரச்சனை குறித்து விவாதித்து வருவதாக தெரிவித்தார். வந்தே மாதரம் தேசிய பாடலின் 150 ஆவது ஆண்டு தினம் குறித்தும், தேசிய சீர்திருத்தங்கள் குறித்தும் விவாதிக்க அனைத்து கட்சி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய புலனாய்வு முகமை 27 ஆள் கடத்தல் வழக்குகளை பதிவு செய்து 169 பேரை கைது செய்துள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர், பஞ்சாப் மற்றும் இமாச்சல பிரதேசத்தை சேர்ந்த 2 ஆட் கடத்தல்காரர்கள் கடந்த அக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டதாகவும் கூறினார்.

குழந்தை திருமணம் (11)

குழந்தை திருமண முறையை ஒழிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார். குழந்தை திருமண முறை ஒழிப்பு குறித்த 100 நாள் விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தை இன்று புதுடெல்லியில் தொடக்கி வைத்து பேசிய அவர், இந்த இயக்கம் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார். இதன் மூலம், பெண் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார். குழந்தை திருமண முறை ஒழிப்பிற்கு மத்திய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று திருமதி அன்னபூர்ணா கேட்டுக் கொண்டார்.

*காசி தமிழ் சங்கமம் (7)*

காசி தமிழ் சங்கமம் 4 ஆம் பதிப்பின் முதல் குழு நேற்று காசியின் முக்கிய இடங்களான அனுமன் காட், பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் மற்றும் சாரநாத் உள்ளிட்ட இடங்களுக்கு சென்றனர். இன்று, அக்குழுவினர் அயோத்யாவிற்கு சென்று, அங்குள்ள முக்கிய கோவில்களான ஸ்ரீ ராம ஜென்ம பூமி, அனுமன்கரி, மற்றும் பிற முக்கிய இடங்களுக்கு சென்று தரிசனம் செய்கின்றனர். தொடர்ந்து, அங்கு நடைபெறும் கலாச்சார நிகழ்ச்சிகளிலும் அவர்கள் கலந்து கொள்கின்றனர்.

*எஸ்ஐஆர் (14)*

சிறப்பு தீவிர திருத்தப்பணி 2 ஆம் கட்டம் தொடங்கப் பட்டதில் இருந்து, சத்தீஸ்கர், கோவா, குஜராத், கேரளா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தமிழ்நாடு, உத்திரபிரதேசம், மேற்கு வங்கம், புதுச்சேரி, லட்சத்தீவுகள், அந்தமான் நிகோபர் தீவுகள் ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கணக்கெடுப்பு படிவங்கள் வாக்காளர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அடுத்த ஆண்டு பிப்ரவரி 14 ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் கடந்த மாதம் 4 ஆம் தேதி தொடங்கிய எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் வரும் 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. வாக்காளர்கள் பலரும் படிவங்களை நிரப்பி கொடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வகையில், புதுச்சேரியை சேர்ந்த கல்லூரி மாணவி அருந்ததி படிவங்களை நிரப்பவது குறித்து தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். இதுகுறித்து மாணவி அருந்ததி கூறுகையில்........

(வாய்ஸ் – அருந்ததி )

*நிதின் கட்கரி* (7)

நாட்டின் மின் வாகன சந்தையின் வளர்ச்சி இன்னும் 5 ஆண்டுகளில் 20 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று மத்திய சாலை போக்குவரத்து துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். மக்களவையில் துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மின் வாகனங்களின் விற்பனை இருக்கும் என்று குறிப்பிட்டார். அடுத்த 5 ஆண்டுகளில் மின் வாகனங்களின் செயல்பாட்டால் 5 கோடி புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் தெரிவித்தார்.

*முதலமைச்சர் பணியானை* (10)

புதுச்சேரி, பொதுப்பணித்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பதவியில் உள்ளவர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக நீண்ட நாட்களுக்குப் பிறகு, 44 இளநிலைப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களுக்கான பதவி உயர்வு ஆணையினை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. இலட்சுமிநாராயணன், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு சுந்தரமூர்த்தி மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*வானிலை* (5)

வட தமிழகம்-புதுச்சேரி கடலோர பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி தற்போது வலுவிழந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

விளையாட்டு (12)

ஜெருசலம் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகெசி பட்டம் வென்றார். இப்போட்டியின் இறுதி சுற்றில் அவர் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தை வென்றார்.

துபாயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா-ஸ்ரீவள்ளி ராஷ்மிகா இணை காலிறுதிக்கு முன்னேறி உள்ளது. மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட் கணக்கில் ஸ்பெயின் நாட்டின் ஜார்ஜினா – சுவிட்சர்லாந்தின் வெலண்டினா இணையை வென்றது.

உலக கோப்பை இறுதி துப்பாக்கி சுடும் போட்டி இன்று தோகாவில் தொடங்குகிறது. வரும் 9 ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் சம்ரட் ரானா, மனு பாக்கர், சுருச்சி சிங் உட்பட 15 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.